# கொரோனா காலத்தில்



இன்று உலகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு பரீட்சையமான ஒரு பெயர் கொரோனா. இந்த கொள்ளை நோய் எப்படி ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது என்பது தேவ பிள்ளைகளாகிய நமக்கு தெரியாவிட்டாலும், ஆண்டவரின் சித்தம், அனுமதி இல்லாமல் இது இவ்வுலகில் இல்லை. ஆனால் ஒன்று, இதை அனுமதித்திருக்கும் ஆண்டவர் அதை எப்பொழுது மறைய செய்ய நினைக்கிறாரோ அப்பொழுது அது மறைந்து போகும்.

மோசேயின் காலத்தில் எகிப்தியர் வாதிக்கப்பட்ட நிலையிலும், ஆண்டவரின் சத்ததிற்கு கீழ்படிந்து செயலாற்றிய இஸ்ரவேலரை அவை எப்படி பாதிக்கவில்லையோ, எகிப்தாகிய உலகத்திற்குள் இருந்தாலும் பரம கானானை நோக்கி செல்கின்ற நாம், இவற்றால் பாதிக்கபடுவதில்லை. ஒருவேளை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் பல தேவ பிள்ளைகள் இறக்கிறார்களே, ஏன் ஆண்டவர் அதை தடுக்கவில்லை என்று கேட்கலாம். உண்மையில் ஆண்டவருடைய சித்தம் இதன் மூலம் அவர்களை தம்மண்டை சேர்த்து கொள்வதற்காக இருக்கலாம். கொரோனாவினால் சபையை ஒன்றும் செய்ய முடியாது. இன்று அனைத்து சபைகளும் மூடி கிடக்கிறது. அநேக சுவிஷேச ஊழியங்கள் தடைப்பட்டு கிடக்கிறது. புனித வெள்ளி, ஈஸ்டர் போன்ற நாட்கள் கிறிஸ்துவின் அன்பை, அவரது பாடு மரணத்தை, அவரது உயிர்தெழுதலின் வல்லமையை மற்றவரோடு

பகிர்ந்து கொள்ளமுடியாதபடி இவ்வருடத்தில் சென்றுவிட்டது. ஒருவேளை பிசாசு, இந்நோயின் மூலம், சபை கூடி வருதலையும், சுவிஷேச ஊழியத்தையும் ஸ்தம்பிக்க செய்ததை போல் நாம் உணரலாம். நாடே பொருளாதார நெருக்கடியில் சென்று கொண்டிருக்க, இனி மிஷன் ஊழியங்கள், சபை ஊழியங்கள் எப்படி தாங்கபடபோகிறது என்று கூட சிலர் நினைக்கலாம். ஒரு வேளை பிசாசு ஏதோ நம்மை பிரேக் போட்டு நிறுத்தி வைத்துள்ளதை போல எண்ணலாம். ஆனால் சபை இக்கொரோனா காலத்தில் செய்ய வேண்டிய ஒரு காரியம் உள்ளது, ஆம், அதை தான் நாம் இப்பொழுது தியானிக்க போகிறோம்.

சபை செய்யகூடிய காரியம் என்றவுடன் விஷேச உபவாச ஜெபத்தை ஏறெடுக்க செய்ய வேண்டும் என்று நினைக்கலாம். ஆம் அதுவே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம். அத்தோடு சேர்த்து நாம் இன்னும் பிற காரியங்களை செய்யும் பொழுது, இக்கொரோனா வியாதியினால் உண்டாயிருக்கிற காயங்களை நாம் கட்டுவதின் மூலம், இக்கொரோனா வியாதி மறைந்துபோவது மட்டுமில்லாமல், மிக சுலபமாக அநேக ஆத்துமாக்களை நாம் இவ்வேளையில் அறுவடை செய்து, பிசாசின் முகத்தில் கரியை பூசலாம். ஆம், இக்கொள்ளை நோயினால் சாத்தான் சிலரை அழிக்க நினைத்தாலும், அவனுக்கே அடி கொடுக்கும்படியாய் கிறிஸ்துவின் அன்பை இச்சூழலில் நாம் உலக மக்கள் அனைவருக்கும் பறைசாற்ற பயன்படுத்தி கொள்ள வேண்டும். ஒருவேளை, ஊரடங்கு போடப்பட்டிருக்கிற இச்சூழ்நிலையில் நாம் என்ன செய்ய முடியும் என்று நினைக்கலாம். அதை நாம் பின்வருமாறு காண்போம்.

இன்று இன்னும் இன்நோயினால் இறப்புக்கள், அழிவுகள் மேலும் அதிகரிக்கும் முன்பு, ஒவ்வொரு சபை அமைப்பும், துரிதமாக குறைந்தது தங்கள் சபை எல்லைக்குட்பட்ட மக்களுக்காக தேவையானவைகளை திட்டமிட்டு செயல் படவேண்டும். நம் இந்திய நாட்டில் உள்ள சபைகள், சபைபாகுபாடு பாராமல் சரியாக திட்டமிட்டு, அரசாங்க அனுமதியோடு / உதவியோடு செய்யவேண்டிய காரியம், இக்கொடிய நோயினால் சரீரரீதியாகவும், மனரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தாக்கப்பட்டு இருக்கும் மக்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளை துரிதமாக செய்து, கிறிஸ்துவின் அன்பை அவர்களிடம் வெளிப்படுத்தி காட்டுவதாகும்.

**யாக் 2:14-17 “என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை**

**நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.“** வசனங்களில் நாம் காண்கிறபடி சபைகுள்ளாக பேசிய / வெளிப்படுத்திய விசுவாசத்தை, சபைக்கு வெளியே விசுவாச கிரியைகளின் மூலம் செயல்படுத்த வேண்டும். ஆம், சரீர தேவைகளோடு, மருத்துவ தேவைகளோடு, என்ன செய்வோம் என்று தெரியாமல் தவிக்கும் நம்மண்டையில் இருக்கும் மக்களின் சரீர தேவைகளுக்கு உதவி, கனிவான மருத்துவ உதவியையும் செய்து, காயம் பட்டிருக்கும் இருதயத்தை கிறிஸ்துவின் அன்பினால் காயம் கட்டும் பொழுது, கொரோனா அவர்கள் வாழ்வை அழிப்பதை தடுத்து அவர்களை நித்திய ஜீவனுக்கு நேராக நடத்தலாம்.

செய்ய வேண்டிய காரியம் மிக சுலபம். ஆனால் செயல்படுத்த வேண்டிய முறையே மிகவும் கவனத்தோடு கையாள வேண்டிய காரியம் ஆகும். சபை தலைவர்கள் குறிப்பாக CSI, CNI, Roman Catholic, AG போன்ற சபைகளின் தலைவர்கள், அரசாங்கத்தை சந்தித்து தங்களால் இயன்ற உதவியை, உணவு வழங்குதல், மேலும் அடிப்படை தேவைகளை அளித்தல், போன்றவற்றை நாட்டின் பல்வேறு இடங்களில் இயங்கும் தங்கள் சபைகளின் மூலம், பள்ளிகளின் மூலம் அந்தந்த பகுதி மக்களுக்கு அளிக்க அனுமதி பெற்று, ஒவ்வொரு கிளை சபைகளின் மூலமாக அந்தந்த பகுதியில் வேண்டிய உதவிகளை அரசின் மூலமாகவே செய்யலாம். ஏனெனில் அரசாங்க உத்தரவின்படி அரசாங்க அதிகாரிகளே ஊரடங்கு உள்ள நிலையில் மக்களை சந்திக்க முடியும். அதே போல சபை மக்களின் மூலமாக ஒரு தொகையை சேகரித்து அதை அரசிடம் அளிக்கலாம். சில சபைகள் ஏற்கெனவே இதுபோன்ற செயல்களை அசாதாரண சூழ்நிலையில் செய்துள்ளன.

ஆனால் இப்பொழுது பாதிப்பு நாட்டின் மூலை முடுக்கெங்கும் இருப்பதால், கொரோனாவினால் தாக்கபடாவிடாலும், பசி, பட்டினியால் தாக்கப்பட்டு ஏற்கெனவே மக்கள் இறக்க தொடங்கி விட்டனர். ஊரடங்கு எப்பொழுது விலக்கி கொள்ளப்பட்டு, இயல்பு நிலை எப்பொழுது திரும்பும் என்பதை உலக நாடுகளே கணிக்க முடியாத இச்சூழ்நிலையில் இப்படிப்பட்ட உதவிகள் அந்தந்த பகுதியில் செய்யப்பட்டு மக்கள் காக்கபடும்பொழுது, இயல்வு நிலை திரும்பிய பிறகு தானாகவே அநேகர் சபையை நோக்கி வருவார்கள். ஒரு வேளை சிலர் கேட்கிறபடி, உலகபிரகாரமான நாடுகளும், அரசியல்வாதிகளும், பிரபலங்களும், தொழில் அதிபர்களும், சினிமா துறையினரும், இன்னும் பலரும் கோடி கணக்கான பணத்தை

கொடுத்து நிவாரண பணிகளை செய்யும் பொழுது, சபை செய்வது எங்கு தெரியபோகிறது என்று நினைக்கலாம். இல்லை சகோதர, சகோதரிகளே, ஆண்டவர் நிச்சயமாக சபை மூலம் நடக்கும் கிரியைகளை வேறுபடுத்தி காட்டுவார்.

ஏனெனில் மற்றவர்கள் ஏதோ தானதர்மம் செய்வது போல் உதவி செய்வதும், ஆனால் சபையோ உள்ளான அன்போடு கிறிஸ்துவின் சிந்தையோடு, நாட்டின் மூலை முடுக்கெங்கும் அதை செய்யும் பொழுது, நிச்சயமாக அதற்கு பலன் கிடைக்கும். அப்படி ஒருவேளை கிடைக்காமல் போனாலும், நாம் ஆண்டவரின் சித்தத்தை நிறைவேற்றினோம் என்ற மனநிறைவாவது கிடைக்கும். ஆனால் இதை செய்ய தவறி, TV, You Tube இல் ஆலய ஆராதனை பார்த்து, சபைக்கு காணிக்கை என்று பணத்தை பையில் போட்டு வைத்து கொண்டு, எல்லாம் சரியான பின்பு இதை நாம் சபைக்கு போய் சேர்போம் என்று நினைத்தாலும், அல்லது சபை நடத்துபவர் அப்படி போதித்தாலும், அதில் ஒரு பகுதியாவது எடுத்து சபையின் மூலமாய் செயல்படவேண்டிய காலம், இக்கொரோனா காலம் ஆகும்.

இக்காலத்தை நாம் வீணடிப்போமானால், பிறகு லட்ச லட்சமாய், கோடி கோடியாய் காணிக்கையை வைத்து சபை கட்டிடத்தை வேண்டுமானால் பெரியதாக கட்டலாமே தவிர ஆத்துமாக்களை ஆதாய படுத்தமுடியாது. தற்போது உள்ள சூழ்நிலையில் (நாள் 16-04-2020), சுமார் 21 லட்சம் மக்கள் நேரடியாக கொரோனாவினால் பாதிக்கப்பட்டு, அதில் 1.3 லட்சம் பேருக்கு மேலாய் மாண்டுபோன இச்சூழ்நிலையில், மரண பயத்தில், அதே நேரத்தில் வாழ்வாதாரமும் இல்லாமல் தவிக்கும் கோடிக்கணக்கான மக்களை சந்திக்க வேண்டிய காலம் இது. மற்ற எந்த காலத்தை காட்டிலும், இந்த ஏப்ரல், மே 2020 மாதங்களில் சபை செய்யும் காரியம், உண்மையிலேயே அநேகர் நித்திய ஜீவனை பெற்றுகொள்ள காரணமாய் இருக்கும்.

எனவே மிக துரிதத்தோடு, சபை செயல்பட வேண்டும். இதில் தேவ பிள்ளைகள் தனி மனிதராய் ஒன்றும் பெரிதாக செய்துவிட முடியாது. ஆனால் சபை பாகுபாடுகளை விட்டு, கிறிஸ்துவின் அன்பை மட்டும் நாம் பறைசாற்ற முற்பட்டால், நாமே 11 ஆம் மணி வேலைக்காரர். செய்யும் வேளை சிறிது காலமானாலும், அதின் அறுவடை மிகுதி. வீட்டின் (சபையின்) எஜமானனாகிய கிறிஸ்து எதிர்பார்பதெல்லாம், அவருடைய ஊழியகாரராகிய நாம் விழிப்போடு இருந்து செயல்படுகிறோமா என்பதேயாகும். உண்மையாய் செயல்பட்டு வெற்றி பெறுவோமானால், அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தி, அவருக்கு

முன்பாக உண்மையும், உத்தமுமான ஊழியனே உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்ற சத்தத்தை கேட்கலாம். கொரோனா காலம் ஒருவேளை இறுதி அறுவடை காலமாய் இருக்கலாம். ஜாக்கிரதையாய் இருப்போம். கிறிஸ்துவின் பணிசெய்வோம். ஆமென், அல்லேலூயா.